

திருச்சபையில் பாவம்
பாடம் 4 ஜூலை 25, 2026


"உங்கள் சரீரமானது நீங்கள்
தேவனாலே பெற்றும் உங்களில்
தங்கியும் இருக்கிற பரிசுத்த
ஆவியினுடைய
ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள்
உங்களுடையவர்களல்லவென்றும்
அறியீர்களா? கிரயத்துக்குக்
கொள்ளப்பட்டீர்களே; ஆகையால்
தேவனுக்கு உடையவைகளாகிய
உங்கள் சரீரத்தினாலும் உங்கள்
ஆவியினாலும் தேவனை
மகிமைப்படுத்துங்கள்."
(1 கொரிந்தியர் 6:19, 20)

கொரிந்திய சபையில் ஆழமாக வேரூன்றியிருந்த பாலியல் ஒழுக்ககேடு என்ற பாவத்தை ஒழிப்பதற்கே, 1 கொரிந்தியர் 5 முதல் 7 வரையிலான அதிகாரங்களில் பவுல் முக்கியமாக முயல்கிறார்.

சகோதரருக்குள்ளேயே இழைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் மோசடிகள் போன்ற பிற செயல்களும் இந்த குறிப்பிட்ட பாவத்துடன் இணைந்திருந்தன: இத்தகைய விவகாரங்கள் உரிமையியல் நீதிமன்றங்களின் முன் கொண்டு வரப்பட்டன.

தெளிவான மற்றும் நேரடியான மொழியை பயன்படுத்தி, பவுல் பாவத்தை சுட்டிகாட்டுவதோடு மட்டுமல்லாமல், அதை கையாள்வதற்கும், மீண்டும் அதில் விழாமல் தடுப்பதற்கும் உரிய தீர்வுகளையும் முன்வைக்கிறார்.







**திருச்சபையில் பாவம்**

- ஓப்புதல் அளிக்கப்பட்ட பாவம்
- பாவத்தை வேரறுத்தல்
- உட்ப்பிரச்சனைகளை கையாளுதல்

**திருச்சபையில் பாவத்தை தவிர்ப்பது எப்படி?**

- பரிசுத்த ஆவியின் ஆலயங்கள்
- சட்டப்பூர்வமான பாலியல் வாழ்க்கை



# திருச்சபையில் பாவம்

# ஒப்புதல் அளிக்கப்பட்ட பாவம்

"இப்படிப்பட்ட காரியஞ்செய்தவனை நீங்கள் உங்களைவிட்டு நீக்காமலும் துக்கப்படாமலும், இறுமாப்படைந்திருக்கிறீர்கள்." (1 கொரிந்தியர் 5:2)

கொரிந்திய சபையில் "உங்களுக்குள்ளே விபசாரம் உண்டென்று பிரசித்தமாய்ச் சொல்லப்படுகிறதே; …அது அஞ்ஞானிகளுக்குள்ளும் சொல்லப்படாத விபசாரமாயிருக்கிறதே." (1 கொரி. 5:1).



திருச்சபையில் இரத்த உறவுகளுக்கு இடையிலான பாலியல் உறவு நிலவியது மிகவும் தீவிரமான ஒரு விஷயமாக இருந்தது. ஆனால் நிலைமை இன்னும் மோசமடைந்தது, ஏனெனில், சபையினரிடையே அருவருப்பை ஏற்படுத்துவதற்கு பதிலாக, அவர்கள் இந்த பாவத்தை பொறுத்துக் கொள்வதில் பெருமை கொண்டனர் (1 கொரி. 5:2).



அந்த சபை முக்கியமாக புறஜாதியினரை கொண்டதாக இருந்தது. நெருங்கிய உறவினர்களுக்கு இடையிலான பாலியல் உறவை அனுமதிக்கக்கூடாது என்று அவர்களின் மனசாட்சியே அவர்களுக்கு உணர்த்தியது. அதோடு, அவர்களின் வேத அறிவு இந்த கருத்தை உறுதிப்படுத்தியது (லேவி. 18:8).

இந்த உறவு பாவம் என்று அவர்கள் தெளிவாக அறிந்திருந்தால்… அதைப் பற்றி அவர்கள் ஏன் பெருமைப்பட்டார்கள் (1 கொரி. 5:6)? சம்பந்தப்பட்ட குடும்பத்திற்கு திருச்சபையில் செல்வாக்கு இருந்ததா? பாவிகளை சகித்துக்கொள்ளும் ஒரு சபை என்று அவர்கள் பெருமை பேசினார்களா? …?

# பாவத்தை வேரறுத்தல்

"புறம்பே இருக்கிறவர்களைக் குறித்துத் தேவனே தீர்ப்புச்செய்வார் ஆகையால் அந்தப் பொல்லாதவனை உங்களைவிட்டுத் தள்ளிப்போடுங்கள்." (1 கொரிந்தியர் 5:13)



முறையற்ற உறவு வழக்கு ஏற்கனவே "பிரசித்தமாய்ச் சொல்லப்படுகிறதே (1 கொரி. 5:1), எனவே, திருச்சபையின் நற்பெயருக்கு பாதிப்பு ஏற்படுவதற்கு தடுக்க அவசர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியிருந்தது, என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்?


ஒரு நபரின் குற்றத்தை உறுதிப்படுத்தும் அல்லது உறுதிப்படுத்தாத தீர்ப்பை வழங்குதல் (1 கொரி. 5:3)

→

பாவத்தை விட்டுவிட மனமில்லாமல், அதே சமயம் தன்னை சபையின் ஓர் அங்கத்தினராகவே கருத வேண்டும் என்று பிடிவாதமாக இருக்கும் ஒரு பாவியுடன் சகவாசம் கொள்ளவோ அல்லது அவனுடன் சேர்ந்து உணவு உண்ணவோ வேண்டாம் (1 கொரி. 5:11)

→

பாவியை வெளியேற்றி அவனை சாத்தானிடம் ஒப்புவிப்பது, ஏனெனில், இப்பாவத்தை தொடர்ந்து கொண்டிருப்பதன் மூலம், அவன் தானாகவே சாத்தானின் ஆதிக்கத்தின் கீழ் தன்னை உட்படுத்தி கொள்ள தேர்ந்தெடுதுள்ளான்(1 கொரி. 5:2பி, 5(மு, 13பி)





திருச்சபையின் ஒழுங்குமுறை (பாவத்தின் தீவிரத்தை பொருட்படுத்தாமல்) எப்போதும் ஒரு மீட்பின் நோக்கத்தை கொண்டிருக்கவேண்டும். அந்த நபர் தனது தவறை உணர்ந்து, மனந்திரும்பும்படி, அது அவருக்கு தெளிவுபடுத்தபட வேண்டும், மற்றும் அவர் "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாளிலே இரட்சிக்கப்படும்படி"(1 கொரிந்தியர் 5:5) விடுங்கள்.



# உட்பிரச்சனைகளை கையாளுதல்

"உங்களில் ஒருவனுக்கு வேறொருவனோடே வழக்குண்டானால், வழக்காடும்படி அவன் பரிசுத்தவான்களிடத்தில் போகாமல், அநீதக்காரரிடத்தில் போகத் துணிகிறதென்ன?" (1 கொரியந்தியர் 6:1)



திருச்சபைக்குள் காணப்படும் பாவப் பிரச்சனைகளை எவ்வாறு தீர்ப்பது என்பதை விளக்கிய பிறகு, சரியான வழிமுறைகளை பின்பற்றாததற்காகவும், விசுவாசிகளுக்கு இடையிலான பிணக்குகளை உலக நீதிமன்றங்களின் விசாரணைக்கு விட்டுவிட்டதற்காகவும் பவுல் அவர்களை கடிந்துகொள்கிறார் (1 கொரிந்தியர் 6:1-6). ஆனால் பவுல் இன்னும் ஒரு படி மேலே சென்று, பிரச்சனையின் வேரையே தாக்குகிறார்.

- முதலாவதாக, சபையில் கருத்துவேறுபாடுகள் இருக்கக்கூடாது (1 கொரி. 6:7மு) அதேவேளையில், சபையை சேர்ந்த ஒருவர் மற்றொருவருக்கு அநீதி இழைக்கவோ அல்லது அவரை ஏமாற்றவோ கூடாது (1 கொரி. 6:8).



- இரண்டாவதாக, சகோதரர்கள் அந்த தவறை மன்னிக்க தயாராக இருக்க வேண்டும் (1 கொரி. 6:7பி).
- மூன்றாவதாக, உறுப்பினர்களுக்கிடையே உடன்பாடு இல்லையென்றால், திருச்சபை அவர்களுக்கு இடையே தீர்ப்பு வழங்கவோ அல்லது மத்தியஸ்தம் செய்யவோ வேண்டும் (1 கொரி. 6:2).

அது ஒரு குற்றவியல் சார்ந்த விஷயமாக இல்லாவிட்டால் (ரோ. 13:1-5), சபைக்குள் எழும் பிரச்சனைகள் சபைக்குள்ளேயே தீர்க்கப்பட வேண்டும்.

“இருளையும் ஆவிக்குரிய பலவீனத்தையும் உண்டாக்கி, நம்முடைய ஆரம்பகால அன்பை அணைத்துப்போட்ட நம்முடைய தனிப்பட்ட குறைபாடுகளையும் பாவங்களையும் அறிந்துகொள்வது நமது கடமையாகும். அது உலகப்பற்றா? சுயநலமா? சுய-மதிப்பு அல்லது பெருமையின் மீதான பற்றா? முதன்மையானவராக இருக்கத் துடிக்கும் எண்ணமா? தீவிரமாகச் செயல்படும் சிற்றின்ப நாட்டமா? தேவனுடைய கிருபையை இச்சைக்குரிய வாழ்வாக மாற்றும் நிக்கொலாய்த்தார் கொள்கையா? ஞானம் மற்றும் மத அறிவு குறித்த பெருமைமிக்க கூற்றுகளை முன்வைக்கும் அதே வேளையில், வாழ்க்கையும் குணநலனும் அதற்கு முரணாகவும் ஒழுக்கக்கேடானதாகவும் இருப்பதோடு, கிடைத்த பெரும் வெளிச்சம், வாய்ப்புகள் மற்றும் சலுகைகளைத் தவறாகப் பயன்படுத்துவதா? எதுவாக இருந்தாலும் சரி—அது வளர்க்கப்பட்டு, வலுவடைந்து, உங்களை ஆட்கொள்ளும் நிலையை அடைந்திருந்தால்—அதை வெல்ல உறுதியான முயற்சிகளை மேற்கொள்ளுங்கள்; இல்லையெனில் நீங்கள் அழிந்துபோவீர்கள்.”

எலன் ஜி உவைட் (யி ஷால் ரிசிவ் பவர், டிசம்பர் 18)


திருச்சபையில்
பாவத்தை
தவிர்ப்பது எப்படி?

# பரிசுத்த ஆவியின் ஆலயங்கள்

"உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?" (1 கொரிந்தியர் 6:19)



சட்டப்போராட்டம் தொடர்பான விஷயத்தை கையாண்ட பிறகு, பவுல் முக்கிய தலைப்புக்கு திரும்புகிறார்: சபைக்குள் நிலவிய பாலியல் ஒழுக்கக்கேடு. அது ஏன் இருந்தது?



கிறிஸ்தவர்கள் பரிசுத்தத்திற்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள் (1 கொரி. 6:11), இந்த பரிசுத்தம் அனைத்து பாவங்களையும் விலக்கி வைப்பதாக இருக்க வேண்டும். ஆனால், தங்கள் பாவங்கள் ஏற்கனவே மன்னிக்கப்பட்டுவிட்டதால், தங்கள் உடலை கொண்டு தாங்கள் விரும்பியதை செய்யலாம் என்று வாதிட்டனர். ஆகவே தான் பவுல் தெளிவுப்படுத்துகிறார் "சரீரமோ வேசித்தனத்திற்கல்ல," (1 கொரி. 6:12-13).



அவருடைய வாதம் இதுதான்: நம்முடைய உடல்கள் கிறிஸ்துவின் அவயங்களாய் இருக்கின்றன. கிறிஸ்துவின் ஒர் அவயத்தை எடுத்து, ஒரு வேசியுடனோ அல்லது விபச்சாரியுடனோ நாம் இணைக்க முடியாது (1 கொரி. 6:15-18).

இறுதியாக, இது ஒரு முக்கியமான விஷயத்தை பற்றி சிந்திக்க நம்மை தூண்டுகிறது: நம் உடல்கள் பரிசுத்த ஆவியின் ஆலயங்களாகும், எனவே, இவை நம் சொத்து அல்ல, ஆனால் தேவனுக்கு சொந்தமானது(1 கொரி. 6:19). தேவன் தம் விலைமதிப்பற்ற இரத்தத்தால் நம்மை வாங்கினார், எனவே நாம் நம் உடலிலும் ஆவியிலும் தேவனை மகிமைப்படுத்தவேண்டும் (1 கொரி. 6:20).

# சட்டப்பூர்வமான பாலியல் வாழ்க்கை

"ஆகிலும் வேசித்தனம் இராதபடிக்கு அவனவன் தன் சொந்த மனைவியையும், அவளவள் தன் சொந்தப் புருஷனையும் உடையவர்களாயிருக்கவேண்டும்." (1 கொரிந்தியர் 7:2)



கொரிந்துவிலுள்ள சபையில் எழுப்பப்பட்ட சில கேள்விகளுக்கு பதிலளிப்பதன் மூலம், பாலுறவு ஒழுக்கக்கேட்டிலிருந்து நாம் எவ்வாறு தப்பி ஓடலாம் என்பதை புரிந்துகொள்ள பவுல் நமக்கு உதவுகிறார் (1 கொரி. 7:1).


அடிப்படையில்: திருமணமானவர்கள் தங்கள் மனைவியுடன் சட்டபூர்வமான பாலுறவை அனுபவிக்க வேண்டும்; தனியாக இருப்பவர்கள் யாருடனும் உடலுறவு கொள்ளக்கூடாது.

சாத்தியமான விபசாரத்திற்கு மற்றவரை தூண்டுவதை தவிர்ப்பதற்காக வாழ்க்கைத் துணைவர்கள் பாலியல் உறவுகளை மறுக்கக்கூடாது(1 கொரி. 7:3-5).



தனிமையில் இருப்பவர்கள், குடும்ப அக்கரையின்றி தேவனை சேவிப்பதற்கான வாய்ப்புகளை சிறப்பாக பயன்படுத்திக் கொள்ளலாம்(1 கொரி. 7:6-8, 32-34).

இச்சைகளை கட்டுபடுத்த முடியாத வரம் கொண்ட தனிமைவாதிகள் ஆசைகளை தவிர்க்க திருமணம் செய்து கொள்ள வேண்டும்(1 கொரி. 7:9).



“தவறிப்போனவர்களுக்காகச் செய்யும் பணியில், ஒவ்வொரு கண்ணும் கிறிஸ்துவை நோக்கியிருக்கட்டும். [...] தவறு செய்தவர்களிடம் இரட்சகரின் மன்னிக்கும் கிருபையைப் பற்றி அவர்கள் பேசட்டும். பாவம் செய்தவர்கள் மனந்திரும்பவும், மன்னிக்க வல்லவரான அவர் மீது நம்பிக்கை வைக்கவும் அவர்களை ஊக்குவிக்கட்டும். [...]

பாவியின் மனந்திரும்புதலைச் சபை நன்றியுணர்வுள்ள இதயங்களுடன் ஏற்றுக்கொள்ளட்டும். மனந்திரும்பும் அவர், அவிசுவாசத்தின் இருளிலிருந்து விசுவாசம் மற்றும் நீதியின் ஒளிக்கு வழிநடத்தப்படட்டும். அவரது நடுங்கும் கரம் இயேசுவின் அன்பான கரத்தில் வைக்கப்படட்டும். இத்தகைய பாவமன்னிப்பு பரலோகத்தில் உறுதிப்படுத்தப்படுகிறது.

எலன் ஜி உவைட் (யுகங்களின் வாஞ்சை, பக். 806)